Tamil

SYDNEY WEST AREA HEALTH SERVICE | NSW HEALTH

# நோயாளிகளுக்கும் வாடிக்கையாளருக்கும் அந்தரங்கம் சம்பந்தமான தகவல்

**(PRIVACY INFORMATION FOR PATIENTS/CLIENTS)**

## உங்கள் பிரத்தியேக மற்றும் சுகாதார தகவல்களைப் பாதுகாத்தல்

**எங்கள் பொறுப்பு**

அந்தரங்கம் சம்பந்தமான சட்டத்துக்கேற்ப உங்கள் பிரத்தியேக தகவல்களைப் பாதுகாப்பது எங்கள் பொறுப்பு.

உங்கள் பிரத்தியேக தகவல்களை எப்படி எதற்காக நாங்கள் சேகரிக்கின்றோம் நீங்கள் எப்படி உங்கள் பிரத்தியேக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம் எப்படி உங்களைப்பற்றிய தகவல்கள் சுகாதார சேவையில் பாவிக்கப்படலாம் அல்லது வேறு சாராருக்கு வழங்கப்படலாம் என்பதை இந்தத் துண்டுப் பிரசுரம் விளக்குகிறது.

### உங்கள் பிரத்தியேக தகவல்களின் சேகரிப்பு

சாத்தியப்படும்போதெல்லாம் நாங்கள் தகவல்களை உங்களிடமிருந்து நேரடியாகப் பெற்றுக்கொள்ளுவோம். இது சாத்தியப்படாத சந்தர்ப்பத்தில் அல்லது அவசரகாலத்தில் நாங்கள் உங்களுக்கு தகுந்த சுகாதார பராமரிப்பை வழங்கக்கூடியதாக இருக்க உதவும்பொருட்டு குடும்ப அங்கத்தவர் ஒருவர் அல்லது நண்பர் அல்லது பராமரிப்பாளர் அல்லது வேறு நபர் ஒருவரிடமிருந்து நாங்கள் தகவல்களைப்பெற வேண்டிய தேவை ஏற்படலாம்.

### சேகரிக்கப்பட்ட தகவல்களின் பாதுகாப்பு

உங்கள் தகவல் பல்வேறு முறைகளில் பேணப்படலாம். பொதுவாக உங்கள் தகவல் கடதாசி ஒன்றில் மருத்துவ அறிக்கையாக வைத்திருக்கப்படும் அல்லது தனியாக அல்லத அதனுடன் சேர்த்து பாதுகாப்பான கணனி விபரக்கொத்தின் ஒரு பகுதியாக மின்மயமான வைத்தியப் பதிவாக வைத்திருக்கப்படலாம். சில தகவல்கள் எக்ஸ்ரே படங்கள் அல்லது புகைப்படங்கள் போன்றன படங்களாக அல்லது ஒலி– அல்லது ஒளிப்பதிவாக வைத்திருக்கப்படலாம். உங்கள் தகவல்களை அனுமதியின்றிப் பெற்றுக்கொள்ளுவதிலிருந்து தொலைந்து போவதிலிருந்து அல்லது வேறுவிதமான துர்ப்பாவனையிலிருந்து பாதுகாக்கும்பொருட்டு உங்கள் அந்தரங்கமான தகவல்களைப் பாதுகாப்பாக பேணிக்காக்க நாங்கள் கடுமையான விதிமுறைகளையும் கொள்கைகளையும் பின்பற்றுவதுண்டு.

### தகவல் பாவனை அல்லது வெளியிடுதல்

கடதாசியில் அல்லது மின்மயமாக பேணி வைத்திருக்கப்படும் உங்கள் அந்தரங்கமான மருத்தவ தகவல் உங்களுக்குத் தகுந்த மருத்தவ சேவைகளை வழங்கும்பொருட்டு இந்த சுகாதார சேவையினால் பாவிக்கப்படலாம் அல்லது சுகாதார சேவைக்கு வெளியே உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படலாம். உதாரணமாக

– உங்களைப் பராமரிக்கும் அல்லது உங்களுக்க மருத்துவம் செய்யும் வேறு சுகாதார சேவைகளுக்கு வைத்தியசாலைகளுக்கு அருத்தவ நிபுணர்களுக்கு
– நீங்கள் நியமித்திருக்கும் பொது அதாவது குடும்ப வைத்தியருக்கு
– நியு சவத் வேல்ஸ் அம்புலன்ஸ் சேவைக்கு
– எக்ஸ்ரே மற்றும் மருத்துவ பரிசோதனைகளை நடத்துவதற்கு
– எங்கள் வேவைகளை மதிப்பீடு செய்து மேம்மடுத்துவதற்கு உதவும்பொருட்டு எங்களிடமிரந்த நிங்கள் பெற்றுக்கொண்ட சேவைகள் சம்பந்தமாக உங்கள் கருத்துக்களையும் விமர்சனத்தையும் பெற்றுக்கொள்ளும்பொருட்டு உங்களுடன் தொடர்பு கொள்ளுவதற்கு
– பற்றுச்சீட்டு வழங்குவதற்கும் கடன் மீளப்பெறுவதற்கும்
– தெய்வீகத் தொண்டும் குரு ஊழியம் புரியும் வைத்தியசாலை குருமார் உட்பட்ட ஆன்மீக ஊழியர்களுக்கு
– பயிற்சிவழங்கும் நோக்கத்துக்காக மாணவர்களுக்கும் ஏனைய ஊழியர்களுக்கும்
– அவசர காலத்தில் ஏற்படுவது போல ஒருவரின் உயிருக்கு அல்லது சுகாதாரத்துக்கு அல்லது நல்வாழ்வுக்கு நிச்சயமாக ஏற்படக்கூடிய பாரதூரமான ஆபத்தைத் தவிர்க்க உதவும்பொருட்டு ஏனைய சுகாதார சேவைகளுக்கும் அங்கீகாரம் பெற்ற மூன்றாவது சாராருக்கும் வழங்குவதற்கு
– முறைப்பாடுகளையும் சட்ட நடவடிக்கைகளையும் கொண்டு நடத்தவதற்கும் முகாமையாளர்களுக்கும் அவர்களுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கும் அல்லது சுகாதார சேவைக்கெதிராக அல்லது மருத்தவம் செய்த அதிகாரிக்கெதிராக நட்ட ஈட்டுக் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தால்
– நியு சவுத் வேல்ஸ் சுகாதார சேவை (NSW Health service) செயல்பாடுகளுக்கும் எங்கள் நோயாளிகளுக்கு மருத்தவம் செய்யவும் மற்றும் நிதி திட்டமிடல் பாதுகாப்பு மற்றும் தராதரம் மேம்படுத்தல் போன்ற அலுவல்களுக்கும்

உங்களைப்பற்றிய சில தகவல்களை நாங்கள் சேகரிப்பதையோ பாவிப்பதையோ வெளியிடுவதையோ நீங்கள் விரும்பாவிட்டால் நீங்கள் இதைப்பற்றி எங்களுக்குச் சொல்ல வேண்டும். இதனால உங்கள் வைத்திய பராமரிப்பில் ஏற்படக்கூடிய விளைவுகளை நாங்கள் உங்களுடன் கலந்துரையாடுவோம்.

உங்கள் அந்தரங்கமான சுகாதார தகவல்கள் மூன்றாவது சாராருக்கு கொடுக்கப்படலாம் என்பதை சட்டம் அனுமதிப்பது மாத்திரமல்லாது அவ்வாறு செய்யுமாறு சட்டம் வேண்டுகின்றது. ஊதாரணமாக

– மாநில மற்றும் பொதுநலவாய அரச நிறுவனங்களுக்கு சட்டப்படி அறிவிப்பதற்காக அதாவது அறிவிக்கவேண்டிய வியாதிகளை அறிவிக்கம்பொருட்டு
– மனிதவள நன்னெறிக்குழுவின் அங்கீகாரம் பெற்ற ஆராய்ச்சிகளை நடத்தும் ஆராய்ச்சியாளர்களுக்கு
– நீங்கள் எங்களுக்கு அடிதடியோ குடும்ப வன்முறையோ அல்லது சிறுவர் துர்ப்பிரயோகம் போன்ற பாரதுரரமான குற்றச்செயல் சம்பந்தமாகத் தெரிவித்தால் நாங்கள் ஏனைய சுகாதார சேவைகளுககோ அல்லது பொலிசார் போன்ற சட்டம் ஒழுங்கு நிலைநாட்டும் நிறுவனங்களுக்கு

– உங்களைப்பற்றிய அந்தரங்கமான தகவல்கள் நீதிமன்றத்தில் அத்தாட்சியாகப் பாவிக்கப்பட தேடுதல் ஆணை அல்லது சமர்ப்பித்தல் ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தால் அதற்கிசைய நடக்கும்பொருட்டு

## உங்கள் தகவல்களைப் பெறுதல்

நியு சவுத் வேல்ஸ் சுகாதார சேவை வைத்திருக்கும் மருத்துவப் பதிவுகள் உட்பட உங்கள் அனைத்து அந்தரங்கமான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் தகுதியுடையவர்களாவீர்கள். பொதுவாக விபரங்களைப்பெற்றுக்கொள்வதற்கு எழுத்துமூலமாக விண்ணப்பிக்குமாறும் அடையாளத்தை உறுதிப்படுத்துமாறும் கேட்டுக்கொள்வார்கள். நீங்கள் உங்கள் அந்தரங்கமான தகவல்கள் சம்பந்தமாக பிரதிகளையோ மருத்துவப் பதிவுகளையோ வேண்டிக்கொண்டால் உங்களிடமிரந்த கட்டணம் அறவிடப்படலாம்.

தகவல்களைக் கொடுப்பதன்மூலம் இன்னுமொருவருக்கு உளரீதியான அல்லது உடல்ரிதியான ஆபத்து எற்படக்கூடிய சந்தர்ப்பமிருப்பின் இத்தகை விசேட சந்தர்ப்பங்களில் தனிப்பட்ட தகவல்களை பெறுவதற்கான உங்கள் கோரிக்கை நிராகரிக்கப்படலாம்.

உங்களைப்பற்றி நாங்கள் வைத்திருக்கும் தகவல்கள் பிழையானவை அல்லது தவறு ஒன்று எற்பட்டுள்ளது என்று நீங்கள் நம்பினால் தயவுசெய்து எங்களுக்கு அறிவிக்கவும். நாங்கள் இதைத் திருத்துவோம் அல்லது மருத்துவப் பதிவில் குறிப்பொன்றை சேர்ப்போம்.

உங்கள் மருத்துவப் பதிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் நீங்கள் வந்த சுகாதார சேவை நிலையத்து முகாமையாளருக்கு அல்லது சுகாதார தகவல் பதிவு சேவைக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும்.

## எங்களுடன் தொடர்பு கொள்ளுள்கள்

உங்கள் பிரத்தியேக தகவல்களின் அந்தரங்கம் பற்றி உங்களுக்குக் கெள்விகள் அல்லது முறைப்பாடு இருப்பின் தயவுசெய்து பின்வரம் விலாசத்தில் தொடர்பு கொள்ளுங்கள்.

அந்தரங்கத் தொடர்பு அதிகாரி
(The Privacy Contact Officer)

சிட்னி மேற்குப்பிரதேச சுகாதார சேவை
(Sydney West Area Health Service)

PO Box 63

PENRITH NSW 2751

Telephone: 02 4734 2120

## வைத்திய பராமரிப்பு மொழிபெயர்ப்பு சேவை

இலவச அந்தரங்கமான மொழிபெயர்ப்பு சேவை வாரம் 7 நாட்களும் 24 மணித்தியாலங்களும் கிடைக்கும். உங்களுக்கும் மொழிபெர்ப்பாளர் ஒருவரை ஒழுங்கு செய்ய ஊழியர்களிடம் சொல்லவும். அவுத்திரேலிய சைகை மொழிபெயர்ப்பாளர்களும் உள்ளனர்.